**குறைவான பராமரிப்பு... நிறைவான வருமானம்...துவளவிடாத தோட்டக்கலைப் பயிர்கள் !**

"பரம்பரையா நாங்க விவசாயிதான். ஆரம்ப காலத்துல நெல், கரும்பு, வெண்டை, மிளகாய், தக்காளி, பாசிப் பயறுனு எல்லா வெள்ளாமையும் செய்திட்டிருந்தேன். ஆனா, தண்ணி பற்றாக்குறை, ஆள் பற்றாக்குறை, ஒழுங்கான விலை கிடைக்காததுனு எல்லாமும் போட்டு வதைக்க... கொஞ்சம் கொஞ்சமா விவசாயத்தைக் குறைச்சுக்கிட்டேன். 93-ம் வருஷத்துல இருந்து மரப்பயிர் சாகுபடிக்கு மாறிட்டேன்" என்று நிம்மதி பெருமூச்சோடு சொல்கிறார் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், கரியமாபுதூர் கிராமத்தைச் சேர்ந்த குழந்தைவேல்.



புளியமரங்கள்... அணிவகுக்கும் மாமரங்கள்...

"எனக்கு ஒரு பையன், ஒரு பெண் பிள்ளை. பையன் வக்கீலுக்குப் படிச்சுட்டு கோயம்புத்தூர்ல ஒரு கம்பெனியில வேலை செய்கிறான். பெண்ணை கரூர்ல திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். நானும் மனைவியும்தான் வீட்டுல. எனக்கும் அறுபத்தஞ்சு வயசாயிடுச்சு. அதனால எங்களுக்குத் தக்குன அளவுல பதினஞ்சு ஏக்கரை மட்டும் கையில வெச்சுக்கிட்டு மீதியை கந்தாயத்துக்கு விட்டுட்டேன்.

**கை கொடுத்த கருத்தரங்குகள்!**

ஆரம்பத்துல நிறைய மரங்களை வெச்சு ஊடுபயிர் வெள்ளாமையெல்லாம் பாத்துக்கிட்டுதான் இருந்தேனுங்க. 2002-ம் வருஷம் வந்த வறட்சியில பாதிக்கு மேல காய்ஞ்சு போச்சு.

தென்னையும், புளியும்தான் கொஞ்சம் தப்பிச்சுச்சு. மிச்சத்தை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா திரும்ப நடவு செய்தேன். இப்போ வரைக்கும் புதுசா மரக்கன்னுகள வாங்கி வந்து நட்டுக்கிட்டே இருக்கேன். ஆரம்பத்துல இருந்தே எல்லா விவசாயப் புத்தகங்களையும் படிப்பேன்.



தென்னை...



சப்போட்டா...



வாழை...

'பசுமை விகடன்' வந்ததுக்கப்பறம்தான் இயற்கை விவசாயம் பத்தி நிறைய விஷயங்களைத் தெரிஞ்சிக்கிட்டேன். விவசாயக் கண்காட்சி, கருத்தரங்கு எல்லாத்துக்கும் முடிஞ்ச மட்டும் போய் கலந்துக்கிட்டு புதுப்புது விஷயங்களைத் தெரிஞ்சுட்டு வந்துடுவேன்.

**பாடம் புகட்டிய கரும்பு!**

70-ம் வருஷம்னு நினைக்கிறேன். அப்போ புகளூர் சர்க்கரை ஆலையில இருந்து கரும்புக்கரணை கொடுத்தாங்க. ஒண்ணரை ஏக்கர்ல நடவு செஞ்சிருந்தேன். அறுவடைக்குள்ளாற நாப்பது நாப்பத்தஞ்சு மூட்டை உரத்தைக் கொடுத்து போடச் சொன்னாங்க. அதுவரைக்கும் சரி, அதுக்கப்பறமும் சரி... எந்தப் பயிருக்கும் நான் அத்தனை மூட்டை உரத்தைக் கொட்டினதே இல்லை. கரும்பு நல்லாதான் வந்துச்சு. ஆனா... அந்த நிலம் அதோட காலி. இன்னிக்கு வரைக்கும் அதுல எந்தப் பயிரும் வர்றதில்லை. 'குப்பை உரத்தை அடி', 'ஜிப்சத்தைக் கொட்டு' இப்படி ஆளுக்கொரு வைத்தியம் சொன்னாங்க. எதுவும் சரிப்பட்டு வரல. இப்பவும் தரிசாத்தான் போட்டு வெச்சிருக்கேன்.

அப்பவே ரசாயனத்து மேல வெறுப்பு. ஆனா... வழி வகை தெரியாம காய்கறி வெள்ளாமைக்கு கொஞ்சமா ரசாயனம் போட்டுத்தான் பண்ணினேன். இப்போல்லாம் சுத்தமா ரசாயனம் தொடுறதே இல்லை. ஆனா, பூச்சிகள விரட்டத்தான் ஒண்ணும் வழி தெரியல. அதனால வருஷத்துக்கொரு தடவை மட்டும் கொஞ்சமா மருந்தடிப்பேன். அதுவும் காய் வந்ததுக்கப்பறம் எந்த மருந்தும் அடிக்கறதில்லை.

**தோட்டம் முழுக்க மரங்கள்!**

இப்ப பதினஞ்சு ஏக்கர்லயும் சேர்த்து 50 புளிய மரம், 120 தென்னை, 450 சப்போட்டா, 250 மா, 32 நாவல், 30 தேக்கு இதெல்லாம் இருக்கு. அத்தி, சீதா, எலுமிச்சை, கொய்யா, மாதுளை, பன்னீர் பலா, ரோஸ் ஆப்பிள்னு நிறைய பழ மரங்களையும் வெச்சிருக்கேன். அங்கொண்ணும் இங்கொண்ணுமா 50 வாழையும் இருக்கு.

மண்ணு களர் மண்ணாப் போச்சு. இப்போதைக்கு தண்ணியும் பற்றாக்குறை. ஆனாலும், முடிஞ்ச மட்டும் வெள்ளாமை பாத்துக்கிட்டுருக்கேன். இப்போதான் சொட்டுநீர் போடுறதுக்கு ஏற்பாடு பண்ணிட்டுருக்கேன்" என்ற குழந்தைவேல் நமக்குத் தோட்டத்தைச் சுற்றிக் காட்டிக்கொண்டே மரங்களைப் பற்றி விளக்க ஆரம்பித்தார்.

**கிரிக்கெட் பால் கவனம்!**

"நாவல்ல விதையுள்ளது, விதை இல்லாததுனு ரெண்டையுமே வெச்சிருக்கேன். பத்து மரம்தான் இப்போ காய்ப்புல இருக்கு. சப்போட்டாவுல பி.கே.எம்-1, பி.கே.எம்-2, பி.கே.எம்-3, கோ-1, கீர்த்திவர்த்தி, பாலா, தரகம்பாடி, விருதுநகர், கிரிக்கெட் பால்னு நிறைய ரகங்கள் இருக்கு. நல்லா விலை போறது பி.கே.எம்-1 மட்டும்தான். இருக்கறதுலேயே படுமோசமானது கிரிக்கெட் பால்தான். சும்மா கொடுத்தாக்கூட வியாபாரிங்க வாங்க மாட்டேங்குறாங்க.

**இமாம்பசந்த்துக்கு நல்ல வரவேற்பு!**

'மா'வுல அல்போன்ஸா, பெங்களூரா, நீலம், சிந்து, பஞ்சவர்ணம், பங்கனப்பள்ளி, செந்தூரம், மல்கோவா, நடுச்சோலை, ருமானி, இமாம்பசந்த், மல்லிகா, காலப்பாடு, பி.கே.எம்-1னு ஏகப்பட்ட வகை இருக்கு. எல்லாத்துலயும் டாப்... இமாம்பசந்த். சுவையிலயும்... விலையிலயும் நம்பர் ஒன்.

இதுபோக எல்லா பழ மரங்கள்லயும் நாட்டு ரகம், ஒட்டு ரகம், விதையிருக்கறது, விதை இல்லாததுனு தேடிப் பிடிச்சுக் கொண்டாந்து நட்டுடுவேன். மலையில விளையுறதைத் தவிர்த்து, தரையில வளர்ற அத்தனை வகையான மரங்களையும் வளத்துடணும்னு எனக்கு ஆசை. அதான் முயற்சி பண்ணிக்கிட்டுருக்கேன்.

**தொழுவுரம் மட்டுமே போதும்!**

தோட்டத்துக்குள்ள வருஷத்துக்கு ஒரு தடவை மழை காலத்துக்கு முன்ன ஒண்ணு, ரெண்டு உழவு ஓட்டி வெச்சுடுவேன். அப்பதான் ஈரப்பதம் இருக்கும். அதேமாதிரி ஒரு ஏக்கருக்கு வருஷத்துக்கு 4 டிராக்டர் குப்பையைக் (தொழுவுரம்) கொட்டிடுவேன். இதுபோக தண்ணி பாய்ச்சுறது மட்டும்தான். வேற பராமரிப்பே கிடையாது.

இதுலயும் சில வருஷம் உழவு ஓட்ட முடியாம, குப்பை போட முடியாம போயிடும். அடுத்த வருஷம் குப்பையைச் சேர்த்துப் போட்டுடுவேன். தோட்டத்துல விழுற இலை தழைகளே மக்கி உரமாயிடுது.பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம்னு எதையும் மெனக்கெட்டு தயாரிச்சு போட வேண்டியதெல்லாம் இல்லீங்க. சாணிப்பாலைக் கரைச்சு விட்டாலே போதும்.... எல்லா மரமும் எழுந்திரிச்சிடும்.

**இடைவெளி அவசியம்!**

மாவுக்கு 25 அடி இடைவெளி; சப்போட்டாவுக்கு 22 அடி இடைவெளி விடணும். இந்த மாதிரி நிறைய இடைவெளி கொடுக்குறப்போ மரம் நல்லாக் காய்க்குது. பழ மரங்களை உயரமா வளர விடாம கவாத்துப் பண்ணி அகலமா படர விடணும்.

அப்பதான் சுலபமா பறிக்க முடியும். தேக்கு மாதிரியான மரங்கள முடிஞ்சளவுக்கு கவ்வாத்து பண்ணி, விட்டு உயரமா வளர விடணும். அப்பதான் நல்ல விலை கிடைக்கும். இது என்னோட அனுபவத்துல பாத்த உண்மை" என்ற குழந்தைவேல் நிறைவாக,

"இருக்குற மரங்களுக்கு தாகம் ஆத்துற அளவுக்கு என்னால தண்ணிகூட பாய்ச்ச முடியல. ஆனாலும் இந்த மரங்க மனசுக்கு நிறைவா எனக்கு வருமானத்தைக் கொடுத்துட்டுருக்கு" என்றார், மகிழ்ச்சியாக.

**வருமானத்துக்குக் குறைவில்லை...**

வருமானம் பற்றிப் பேசும் குழந்தைவேல், 'ஒரு மாமரத்துக்கு 500 ரூபாய்னு குத்தகைக்கு விட்டிருக்கேன். 250 மரத்துல இருந்து வருஷத்துக்கு 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்குது. இப்போ சின்ன மரமா இருக்கறதாலதான் இவ்வளவு குறைவா கிடைக்குது. மரமெல்லாம் பெரிதாகி விட்டால்... இன்னும் கூடுதல் விலை கிடைக்கும்.

450 சப்போட்டா மூலமா வருஷத்துக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபா வருமானம் கிடைக்குது. 9 நாவல் மரம்தான் காய்ப்புல இருக்கு. அது மூலமா வருஷத்துக்கு 18 ஆயிரம் ரூபாய் கிடைக்குது. தேங்காயை, கொப்பரையா மாத்திதான் விற்கிறேன். 120 தென்னையிலிருந்தும் வருஷத்துக்கு

72,000 ரூபாய் கிடைச்சிடும். ஒரு எலுமிச்சைதான் இப்போதைக்கு காய்ப்புல இருக்கு. அது மூலமா வருஷத்துக்கு 2,000 ரூபாய் கிடைக்குது.

என்கிட்ட இருக்குற மாடு, கந்தாயத்துக்காரங்க மாடுனு 10 மாடுக தோட்டத்துக்குள்ள இருக்கு. அது மூலமா கிடைக்கிற குப்பையே போதுமானதா இருக்கு. அதனால பெரிதாக இடுபொருள் செலவு ஒன்றும் கிடையாது. இன்னும் சொட்டுநீரெல்லாம் பாய்ச்சி மரங்களைத் வளர்த்தா... வருமானம் கூடும்" என்று நம்பிக்கையோடு சொல்கிறார்.

**தொடர்புக்கு**
குழந்தைவேல்
கரியமாபுதூர் கிராமம்
அரவக்குறிச்சி வட்டம்
கரூர் மாவட்டம்
அலைபேசி : 94895-71080.

---

**ஆதாரம்** : www.vikatan.com பசுமை விகடன் வெளியிட்டான தேதி, 25.09.2011